REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 10உ செவ்வாய் (26—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 11உ புதன் (27—10—54) [இதழ் 115

## ஆசியாவிலேயே சிறந்த தொழில் துறை பல்கலைக்கழகம்!

### கான்பூரில் அமைக்க முயற்சி?

"இந்தியாவில் மட்டுமின்றி ஆசியாவிலேயே மிகப் பெரியதும் சிறந்ததுமான தொழில்துறை பல்கலைக்கழகம் ஒன்றை கான்பூரில் நிறுவ முயற்சிப்பேன்," என்று, உ. பி. முதன் மந்திரி பண்டித கோவிந்த வல்லப பந்த் குறிப்பிட்டார்.

ஹார்கோர்ட் பட்லர் தொழிற்கழகம் ஒன்றின் துணைக் கட்டிடத்திற்கு கல்நாட்டுவிழா செய்தபோதே அவ்வாறு அவர் கூறினர் எனத் தெரிகிறது.

# மேலான வளமிகு வாழ்வு பெற்றிருந்த தமிழன் கீழான தாழ் நிலைக்குச் சென்றது ஏன்?

## மனு தர்ம சாத்திரங்கள் மடமையைப் புகுத்தின!

## விழ்ச்சியுற்றவர் எழுச்சியுற ஏற்றத் தாழ்வு நீங்க வேண்டும்!

### யாழ்ப்பாணத்தில் தோழர் நெடுஞ்செழியன் விளக்கம்

"எல்லாத் துறைகளிலும் அன்று உயர்வு கொண்டு மேம்பட்டுவந்த தமிழன், இற்றை நாட்களில் சீர்கெட்டுப்போன காரணம் என்ன? மனுதர்ம சாத்திரங்கள் போன்ற சமயக் கோட்பாட்டு நூல்கள் மடமையைப் புகுத்தி, அவனை அடிமை கொண்டு ஏமாந்தவனுக்கி விட்டன. மிருகங்களிடையேயும், அற்பப் பிராணிகளிடமும் இல்லாத நடைமுறை—உயர்வு தாழ்வு என்ற பாகுபாடு மனிதனிடம் காணப்படுகிறது. இது வெட்கப்படக்கூடியது மட்டுமல்லாமல் வேதனைப்படக்கூடியதோர் விஷயமாகும். விழ்ச்சியுற்ற தமிழன், தனது செல்வாக்கை—நாகரீகத்தை, பண்பாட்டை மீண்டும் பெற வேண்டுமானுல், 'முன்னேர் வகுத்தது—முனிவர்கள் அருளியது' என்று கூறி தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளாமல், முதன்முதலாக சமுதாயத்திலே மலிந்து கிடக்கும் சாதி வேறுபாடுகளை, உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற பாகுபாடுகளைக் களைந்தெறிய வேண்டும்."

"'அறிவுடையோர் எல்லாமுடையர்' என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கொப்ப, சுய அறிவுடனும், ஆற்றலுடனும் வாழ்ந்த பண்டைத் தமிழன் வாழ்க்கைக்கு அவசியமான வளங்கள் யாவும் பெற்று வாழ்ந்தான். இயற்கையோடு இசைந்த அவன் வாழ்வில், மூடத்தனத்திற்கே இடமில்லாமலிருந்தது; ஆனுல், இன்றே, அவன் தனது அறிவைக் கைவிட்டதுடன், மூட பக்திக்கும், குருட்டு நம்பிக்கைகளுக்கும் தன்னைத் தானே ஆளாக்கிக் கொண்டான்."

"இலக்கியம், காலத்தைக் காட்டும் ஒரு கண்ணாடியாக விளங்குகிறது. நமது இலக்கியங்களில் தொன்மை வாய்ந்த தொல்காப்பியம், ஒரு தலைசிறந்த நூலாக விளங்குவதுடன், வாழ்வனைத்துக்கும் இலக்கணம் வகுத்துக் கூறுகிறது. அது மட்டுமின்றி, பதிற்றுப்பத்து, புறநானூறு, மற்றும் சிறப்பு மிக்க நூல்கள் பலவும் தமிழ் இலக்கிய நூல்களாகத் திகழ்கின்றன."

"இந்த இலக்கியம் தந்த பெருமை, தமிழரைப் பொறுத்த வரையில், ஆண்களை மட்டுமல்லாமல் பெண்களையும்தான் சாரும். புலவர்களாக மட்டுமில்லாமல் வெளிநாட்டுத் தூதுவர்களாகக்கூடப் பெண்கள் பணி புரிந்துள்ளனர். அவ்வையார் தொண்டைமானிடம் தூது சென்றார் என்பதை இலக்கிய நூல்கள் தெரிவிக்கின்றன."

*—இவ்வாறு தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், யாழ்ப்பாணம் நகர மன்றத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டபோது 'தமிழர் நாகரீகம்' என்பது பற்றிப் பேசுகையில் கூறினர்.*

*தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:—*

*"உலகில் அநாகரீகம் நிலவிய நாட்களிலேயே தமிழ்ப்பெருமக்கள் நாகரீகத்தில் சிறந்து விளங்கினர்; ஆங்கிலேயர்கள் கடற்கரை ஓரங்களில் மீன் பிடித்துக் கொண்டு வாழ்ந்த காலத்தே, நம் மூதாதையர்கள் இந்த உலகிற்கே வழிகாட்டிகளாக நாகரீகம் மிகுந்து வாழ்ந்தனர். நமது நாட்டு நாகரீகம், உலகில் மற்றெந்த நாட்டு நாகரீகங்களுக்கும் முற்பட்டது; லெமூரிய நாகரீகம் இன்றைக்கு சுமார் ஏழாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் தெள்ளத்தெளிய எடுத்துக் கூறியுள்ளனர். அதுபோலவேதான், தமிழ்மொழியும்—அதன் இலக்கிய வளர்ச்சியும் உச்ச நிலைபெற்று வழங்கி வந்தது.*

இயற்கையின் தன்மை கண்டு, வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை உண்டுபண்ணியவனும் தமிழன்தான் — இயற்கையைப் பயன்படுத்திக் கொண்ட பெருமையும் தமிழனுடையதுதான்!

ஆனுல், வேகமாக முன்னேறிச் சென்றுகொண்டிருந்த பண்டைத் தமிழரின் அறிவு வளர்ச்சி, கி. பி. இரண்டாம் நூற்றுண்டோடு நிறுத்தப்பட்டுவிட்டதுமல்லாமல், வரவர தேய்ந்து கொண்டே வந்திருக்கிறது. இவற்றிற்குக் காரணம் மூடப்பக்தியும், குருட்டு நம்பிக்கைகளும்தான்!

புராணங்களையும், இதிகாசங்களையும் நாம் எதிர்ப்பதாகச் சொல்லுபவர்கள், தங்கள் அறிவுக் கண்களால் பார்க்க வேண்டும். இலக்கியச் சுவைக்காக அத்தகு நூல்களில் எவற்றையாவது படித்தாலும் அவற்றிலுள்ள பொருத்தமற்ற கருத்துக்களை ஏற்க முடியாது. அப்படி ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமென்றுல், புராணத்திலே சொல்லப்படுகிறது என்ற காரணத்துக்காக பூமி தட்டையாகத்தான் இருக்கிறது என்று நம்பிக் கொள்வதா?"

## புத்தாகி கலவரம்: 40 பேர் கைது!

*முசாபர்பூர், அக். 23—*

*புத்தாகி கிராமத்தில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தினையொட்டி 40 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர் என்றும், கலவரத்தில் ஏழு பேர் மரணமடைந்தனர்—பலர் காயமுற்றனர் என்றும் தெரிகிறது.*

*கலவரம் நடைபெற்ற இடத்தில் உயர்தர அதிகாரிகள் முகாம் போட்டுள்ளனர். முதல் அமைச்சர் டாக்டர் கிருஷ்ண சின்ஹாவும். செய்தி இலாகா அமைச்சர் மகேஷ் பிரசாத் சின்ஹாவும் அங்கு செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

## மெண்டஸ் பிரான்ஸ் வாஷிங்டன் போகிறார்

*பிரெஞ்சு பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ் அடுத்த மாதத்தில் வாஷிங்டன் சென்று இரண்டு நாட்கள் தங்குவார் என்றும், நவம்பர் 18-ந் தேதி ஐசன்ஹோவருடன் விருந்துண்பார் என்றும், வெள்ளை மாளிகை அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.*

## உ. பி. துண்டாடப்பட கூடாது!

### மாநில புனரமைப்புக் குழுவிடம் உ. பி. அரசாங்கம் முறையிடு!

*"உத்திர பிரதேச மாநிலம், சமூக, கலாச்சார, அரசியல் ஆகிய எந்தவகையாலும் துண்டாடப்பட முடியாத ஒன்று," என்று, மாநில புனரமைப்புக் குழுவிடம், அறிக்கை ஒன்றின் மூலம் உ. பி. சர்க்கார் தெரிவித்துள்ளதாம்.*

*மாநில சட்டசபையில் நாராயண் தத்திவாரி என்ற பி.-சோ. உறுப்பினர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மேற்கூறிய தகவலை வெளியிட்ட முதன்மந்திரி* பண்டித கோவிந்த் வல்லப பந்த் மேலும் கூறுகையில், "உத்திர பிரதேசம் பல பிரிவுகளாக துண்டாடப்படுமானுல், அது நிவர்த்திக்க முடியாத தீமைகளைப் பயக்கும்," என்றும் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

## கல்லக்குடி-அடுத்த கட்டம்

★

★ 'கல்லக்குடி' வழங்கப்பட்டுவிட்டது — அறப்போர் வென்றது — என் வாழ்த்தும் வணக்கமும் தொடர்பு கொண்ட அனைவருக்கும்.

★ 'கல்லக்குடி' வழங்கிய மத்திய சர்க்கார் இரயில்வே அமைச்சருக்கும், மாநிலத்தின் மனப்போக்கை எடுத்துக் காட்டி, இந்த நீதி கிடைக்கச் செய்த சென்னை சர்க்காருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

★ 'கல்லக்குடி' வழங்கப்பட்டிருப்பது, 'காமராசர் சர்க்கார், மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் மாண்பு கொண்டது' என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது—மகிழ்கிறேன்.

★ 'கல்லக்குடி' கிடைக்கத் தொண்டாற்றிய அனைவருக்கும், துணை நின்ற பல்லோருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

★ 'கல்லக்குடி' கோரி நடத்தப்பட்ட கிளர்ச்சியின்போது உயிரிழந்த வீரத் தியாகிகளை எண்ணி உருகாமலிருக்க யாரால் இயலும்? அவர்களின் வீரத் தியாகம் வீண் போகவில்லை என்பது கண்டு, நமது மனமெலாம் எழுச்சிமயமாகிறது.

★ 'கல்லக்குடி' காண அரும்பாடுபட்டு உயிர் நீத்த தோழர்களின் குடும்பத்தாருக்கு, 'நினைவுக் காணிக்கை' செலுத்த வேண்டியது தி. மு. கழகத்தின் கடமை — ஏன் — அறம் அறிந்த அனைவருக்கும் அக்கடமை உண்டு.

★ 'கல்லக்குடி' வெற்றி கண்ட தோழர்கள், இனி, அந்த 'காணிக்கை' உருவாகச் செய்யும் பணியினை அடுத்த கட்டமாகக் கொள்ள வேண்டுகிறேன். இதுகுறித்துத் தோழர்களின் சீரிய யோசனைகளை அறிய அவாவுள்ளவனுக இருக்கிறேன்."

அன்பன்,

**அண்ணாதுரை**

## 'திட்டங்களை நிறைவேற்றுகையில் சிக்கனமாகச் செலவு செய்யுங்கள்'

## 'சம்பள உயர்வு கோராதீர்கள்!'

### சமுதாய நலத் திட்ட ஊழியர்களுக்கு நாகன்ன கவுடா உபதேசம்

"சமுதாய நலத் திட்டங்களில் வேலை செய்பவர்கள், திட்டங்களுக்குச் செலவிடும் பணத்தை விவேகமுடனும், சிக்கனத்துடனும் கையாள வேண்டும்; திட்டங்கள், நாட்டு மக்களுக்கு வாழ்வு தருவதற்காக நிறைவேற்றப்படுகின்றனவேயன்றி பணம் திரட்டும் நோக்கத்துடனல்ல,"

*இவ்வாறு விவசாய மந்திரியான டாக்டர்நாகன்னகவுடா, மைசூரில்* சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பேற்றுப் பணியாற்றும் மாவட்ட அதிகாரிகள், அபிவிருத்திக்கான அதிகாரிகள் ஆகியோரடங்கிய மாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற, சர்க்கார் இலாகாக்கள் பலவற்றினிடையேயும் கூட்டுறவு இருக்க வேண்டும்; பல இலாகாக்கள், நிர்வாகம் செய்யும் அலுவலாளர்களை நியமிப்பதற்கே அதிகமான செலவு செய்கின்றன; சமுதாய நலத் திட்டங்களில் வேலை செய்பவர்கள், அதிகமான சம்பள விகிதங்களும், பஞ்சப்படியும் கேட்பதை நான் வெறுக்கிறேன்."

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 26—10—1954 செவ்வாய்


# பாகிஸ்தான் அமர்க்களம்

உத்தமர் காந்தியார், ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக, புதியதோர் அரசியல் அந்தஸ்தை இந்தியத் துணைக் கண்டத்துக்குப் பெற்றுத் தந்தார். அவர் பெற்றுத் தந்த புதிய அரசியல் அந்தஸ்தின் தேவையையும், முழுப் பயனையும் விளக்கமாகத் தெரிந்துகொண்டுதான், இங்குள்ள பெரும்பான்மை மக்கள், உத்தமரின் முயற்சிக்கு உரிய ஆதரவு காட்டினார்கள் எனக் கொள்வதற்கு, இந்திய வரலாறு இடமளிப்பதாக இல்லை. அவரைப் பின்பற்ற மக்கள் முனைந்ததற்கு, அவருடைய அரசியல் அவாவைக் காரணமாகக் கருதுவதைக் காட்டிலும், அவருடைய மதப் பண்பும், தூய வாழ்வுமே, சாதாரண மக்கள் அவரைப் பின்பற்றுவதற்குக் காரணங்களாக இருந்தன எனக் கருதுவதே பொருத்தமானதாகும்.

உத்தமர் காந்தியார் போலவே, காலஞ்சென்ற பெரியார் ஜின்னாவும், முஸ்லீம் மக்களுக்காக பாகிஸ்தான் சுதந்திர அரசை உருவாக்கினார். இந்தியத் துணைக் கண்டம், பிரிட்டிஷ் ஆட்சிக்குமுன் என்றும் ஒரே ஆட்சியின்கீழ் இருந்ததில்லை என்ற இந்திய வரலாற்றின் உண்மையை வலியுறுத்துவதுபோல், பாகிஸ்தான் அரசு உருவாயிற்று. பாகிஸ்தானை உருவாக்க ஜின்னா, 'மதத்தை' அடிப்படையாகக்கொண்டார். கோடிக்கணக்கான முஸ்லீம மக்களுக்கு ஒரு 'தனித் தாயகம்' தேவை என வாதிட்டு வெற்றியும் கண்டார். ஜின்னா, பாகிஸ்தான் அரசு பெற்ற கதைக்கு உலக வரலாற்றில் உவமை கிடையாது—வரலாற்றுத் துவக்கத்திலிருந்து என்றும் நிகழாத புதுமை!

உத்தமர் காந்தியாருக்கு மக்களின் ஆதரவு எந்த அடிப்படையில் எழுந்ததோ, அதே அடிப்படையில்தான் காலஞ்சென்ற ஜின்னாவிற்கும் முஸ்லிம் மக்களின் ஒன்றுபட்ட ஆதரவும் கிடைத்தது.

ஜின்னாவின் அறிவிலும், ஆற்றலிலும், உயர்ந்த பண்பாட்டிலும், முஸ்லிம் மக்களுக்கு இருந்துவந்த அபார பற்றுதலும் பாசமும், பாகிஸ்தான் அரசை உருவாக்கப் பெருந்துணை செய்ததுபோல், உருவான அரசை, அவர் மறைவுக்குப் பின்னர், ஒழுங்குபட அமைத்து, செயல்படுத்தி வருவதற்குத் துணை செய்யவில்லை. அவர் மறைவுடன், பாகிஸ்தான் குடிமக்களுக்குள் காணப்பட்ட கூட்டுறவுப் பண்பு குலைந்து விட்டது. அன்று காணப்பட்ட ஒற்றுமை, மேலும் உரம் பெற்று வளர முடியாமல் போய் விட்டது. எனவே, ஒரே அமர்க்களமாக மாறி இருக்கிறது பாகிஸ்தான்!

ஜின்னாவிற்குப் பிறகு, ஆட்சிப் பொறுப்பை ஒப்புக்கொண்ட அரசியல் தலைவர்களிடத்தில், ஜின்னாவின்பால் இருந்தது போன்ற நம்பிக்கையும் பற்றுதலும், பாகிஸ்தான் மக்களுக்கு இல்லை. அந்தத் தலைவர்களைச் சந்தேகிக்கும் அளவிற்கு, அந்தத் தலைவர்களின் அரசியல் நடைமுறையும் இருந்து வருகிறது.

பாகிஸ்தானில் உள்ள குடிமக்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம் மதத்தைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தபோதிலும்கூட, ஜின்னாவை நம்பின அளவிற்கு, இப்போதுள்ள அரசியல் தலைவர்களை அதே முஸ்லிம் மக்கள் நம்ப மறுக்கிறார்கள்.

பாகிஸ்தானில் இன்றுள்ள எந்த ஒரு அரசியல் தலைவருக்கும், முஸ்லிம் மக்களிடையே, ஜின்னாவுக்கு இருந்ததுபோன்ற ஒருமனப்பட்ட ஆதரவு கிடையாது. ஒவ்வொரு தலைவரையும் ஆதரிக்கும் வகையில் மக்கள் சிறு சிறு கூட்டமாகப் பிரிந்து கிடக்கிறார்கள். ஒரு உருவான கொள்கை மீது வளர்ந்தோங்க வேண்டிய அரசியல் வாழ்வு, குறிப்பிட்ட ஒவ்வொரு தலைவரை ஆதரித்து வளருவது என்ற கேவல நிலைக்கு வந்திருக்கிறது.

பாகிஸ்தான் அரசியல் வாழ்வில், கொள்கை அரசியல் முறை மாய்ந்து, கும்பல் அரசியல் முறை கூத்தாடிக்கொண்டு இருக்கிறது. பாகிஸ்தான் எதிர்கால வளர்ச்சியை, இது மிக மிக பாதிக்கும் என்பதில் ஆட்சேபனை இல்லை.

அங்குள்ள தலைவர்களிடையே அதிகாரப் போட்டி, பெரும் போராட்டமாக மாறிவிட்டிருக்கிறது. அதிகாரம் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு அமைப்பினிடமே இருக்க வேண்டுமெனவும், அந்த அமைப்பும் தங்கள் பிடியிலேயே இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற பேராசையும் பாகிஸ்தானில் மூண்டெழுந்துள்ள அரசியல் அமர்க்களத்துக்கு மூல காரணமாகும்.

இங்குள்ளது போன்றே பாகிஸ்தானிலும், பல மொழி, பல கலாச்சாரம், பல இனவழி வந்தமக்கள் உள்ளனர். அவரவர்களுக்கு என தனித் தனி நிலப் பரப்புகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக கிழக்கு பாகிஸ்தானை எடுத்துக்கொள்வோம். அங்குள்ள குடி மக்கள் வங்க மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்; அம்மொழி வழி வந்தவர்கள். அவர்கள், உருது, பாகிஸ்தானின் ஆட்சி மொழியாவதை முழுமூச்சுடன் எதிர்த்தவர்கள் — இன்றும் எதிர்த்துக்கொண்டு இருப்பவர்கள்; எனவே, அவர்கள், அதிகாரமெல்லாம் குறிப்பிட்ட ஒரே இடத்தில் குவித்து வைப்பதை ஏற்க மறுத்து, குறிப்பிட்ட சில இனங்கள் நீங்கலாக, மற்ற இனங்களில் எல்லாம், அதிகாரம், மாநிலங்களுக்குப் பரவலாக இருக்க வேண்டும் எனக் கிளர்ச்சி செய்கின்றனர்.

சில திங்களுக்கு முன் நடைபெற்ற மாநிலத் தேர்தலின் முடிவு, இதை வலியுறுத்துகிறது. இதுபோன்றே, பாகிஸ்தான் பாஞ்சாலத்தின் போக்கும் இருந்துவருகிறது.

அதிகாரம் அனைத்தையும் குறிப்பிட்ட மத்திய சர்க்காரிடமே சேர்த்துவைக்க வேண்டுமெனக் கருதும் அரசியல் தலைவர்களுக்கும், அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற அரசியல் தலைவர்களுக்கும் இடையில் இன்று பாகிஸ்தானில் மோதுதல் கிளம்பி இருக்கிறது. இந்த மோதுதலில், அரசியல் தலைவர்களிடம் உள்ள தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளும் முக்கிய இடம் பெற்றுள்ளன என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

எவை காரணமாக இருந்தபோதிலும், பாகிஸ்தானில் 'அமர்க்களம்' உச்ச நிலையைத் தொட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. அரசியல் ஆட்சிக் குழுவை பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் கலைத்துவிட்டதும், முகமதலியைப் பிரதமராகக் கொண்டு புது அமைச்சரவையை உருவாக்கி இருப்பதும், பாகிஸ்தானில் உருவாகியுள்ள நோயின் அறிகுறிகளாகுமேயல்லாது, மூலநோயாகாது. மாநில தன்னாட்சிக்கும், பலம் பொருந்திய மத்திய ஆட்சிக்கும் இருந்துவரும் பெரும் போரே மூலநோயாகும். மாநில தன்னாட்சிக்குச் சாதகமாக பிரச்னைத் தீர்க்கப்பட்டாலல்லாது, பாகிஸ்தானில் இன்று ஏற்பட்டுள்ள அமர்க்களம் நிரந்தரமான அமைதிபெறாது என்பது நிச்சயம்.

---

# "காலத்திற்கு ஏற்ப நடந்து கொள்ளுங்கள்"

## விருந்திலிருந்து வெளியேறிய தூதுவர்களுக்கு பிரிட்டிஷ் தொழிற் சங்கத் தலைவர் அறிவுரை!

மாஸ்கோவில் பர்மியத் தூதுவர் அளித்த விருந்தொன்றில் கம்யூனிஸ்டு சீனத் தூதுவர்களும், கிழக்கு ஜெர்மனி தூதுவர்களும் அழைக்கப்பட்டிருந்ததைத் எதிர்த்து, விருந்தில் கலந்து கொள்ள மறுத்து வெளியேறிய மேற்கு நாடுகளின் தூதுவர்களின் செயலை அண்மையில் மாஸ்கோ சென்று வந்த தொழிற்கட்சித் தலைவர் டாக்டர் ஈடித் சம்மர்ஸ்கில் கண்டித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற ராஜதந்திரிகள் விருந்தொன்றில் அவர் பேசுகையில், 'மாஸ்கோவில் அவர்கள் மிகவும் கேவலமாக நடந்து கொண்ட'தாகக் கண்டித்தார்.

"இது போன்ற கேவலமான, அறுவெறுக்கத்தக்க நடத்தைகளை நாம் இக்காலத்தில் கண்டிக்க வேண்டும்; இது போன்ற செய்கைகள், அகில உலக உறவுகளைப் பாதிப்பதுடன், எல்லாக கட்சியினையும் சேர்ந்த அரசியல்வாதிகள் சென்று ஏற்படுத்தும் நல்ல சூழ்நிலையையும் பாதிக்கும் தன்மையுடையன; இருபதாம் நூற்றாண்டின் சூழ்நிலைகளுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப நாம் நமது இராஜீய நடத்தைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்; சாதாரண கிராமவாசிகள் கூட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பொறுமை, தவறான நடத்தைகளை நாம் இக்கால இராஜ்ய நிகழ்ச்சிகளில் வெளிப்படுத்தக் கூடாது," என்று அவர் கூறினார்.

மாஸ்கோவில் நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்ட தூதுவர் ஒருவர், "பதினேறு ஆண்டு காலமாக கிடைக்காத நல்ல வாய்ப்புகள்—மற்றவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் முறையில் இந்த விருந்தில் இருந்தன," என்று கூறினார்.

★

### பர்மா பிரதமர் விளக்கம்

மாஸ்கோவில் பர்மா தூதுவர் அளித்த விருந்தொன்றில், மேற்கு நாடுகளின் தூதுவர்கள் நடத்திய வெளியேற்றம் பற்றி தனக்கு இன்னும் விவரங்கள் கிடைக்கவில்லை என்று பர்மியப் பிரதமர் யூ-நு கூறினார்.

இரங்கூனில் உள்ள அமெரிக்கத் தூதுவர், தனது சர்க்கார் பிரதிநிதி விருந்திலிருந்து வெளியேறியதின் காரணத்தை பர்மாவின் வெளிநாட்டமைச்சரிடம் தெரிவித்திருக்கிறார் என்று யூ-நு மேலும் கூறினார்.

---

# அமெரிக்காவிலும் இந்தியத் துணிக்கு கல்தா!

## இறக்குமதியினால் அமெரிக்காவின் உற்பத்தி பாதிக்கிறதாம்!

அமெரிக்க நாட்டு துணி உற்பத்தியாளர்களெல்லாம் தங்கள் நெருக்கடிகளுக்குப் பரிகாரம் கோரியுள்ளனர்.

அமெரிக்காவிற்கு இந்தியா, ஜப்பான், பிரிட்டன், மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தெல்லாம் துணி இறக்குமதி செய்யப்படுவதால் தங்கள் தொழில் பாதிக்கப்படுவதாகவும், அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குப் பரிகாரம் தேடித் தர வேண்டுமென்றும் அரசாங்க வர்த்தகக் குழு ஒன்றிடம் முறையிட்டுள்ளனர் என்று தெரிகிறது.

அமெரிக்கா, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற பொருள்களுக்கு விதிக்கப்படும் சுங்க வரியில் வெகு விரிவான அளவு சலுகைகள் தந்திருக்கிறது —சுங்க வரி விதிப்பு, வர்த்தகம் ஆகியவற்றிற்கான பொது ஒப்பந்தப்படி; ஆனால், அமெரிக்காவிற்குப் பொருள்களை ஏற்றுமதி செய்கிற நாடுகள் தங்கள் நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அமெரிக்கப் பொருள்களின் மீது கடுமையான வரி விதிப்பைக் கையாண்டு வருகின்றன என்றும், துணி வர்த்தகர் சங்கத் தலைவரான ரே பெல் என்பவர் குறிப்பிட்டார்.

மேலும், "அமெரிக்க துணி ஏற்றுமதி வெகு வேகமாகச் சரிந்து கொண்டு வரும்போது, வெளிநாட்டுத் துணி இறக்குமதி அதிகரித்துக் கொண்டே செல்லுகிறது; இறக்குமதி செய்யப்படுகிற வெளிநாட்டுத் துணி அமெரிக்காவிலேயே உற்பத்தியாகும் துணியைக் காட்டிலும் விலை குறைவாகவே உள்ளது; இதனால் உள்நாட்டிலும் அமெரிக்கத் துணிக்கு, போட்டியினால், தகுந்த மார்க்கெட் கிடைக்கவில்லை; எனவே, ஏற்கெனவே உற்பத்தி அதிகமாயுள்ள நாடான அமெரிக்காவில் இறக்குமதி தொடர்ந்து அதிக அளவு இருக்கக்கூடாது," என்றும், அரசாங்க வர்த்தகக் குழுவினரிடம் ரே பெல் தெரிவித்திருக்கிறாராம்.

[குறிப்பு: இங்கிலாந்து நாட்டிலும், இந்தியத் துணி இறக்குமதியினால், துணி உற்பத்தித் தொழில் வெகுவாகப் பாதிக்கப் பட்டிருப்பதாயும், அதனால், இந்தியத் துணி இறக்குமதி கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் அந்த நாட்டு முதலாளிகள் முறையிட்டுள்ளனர் என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளதும் இப்போது நினைவுபடுத்திக் கொள்ளத்தக்கது.]

---

# கால்வாய் நீர் தகராறு

## பாகிஸ்தான் தூதுக் குழு!

கால்வாய் நீர் தகராறு பற்றி வாஷிங்டனில், வருகிற நவம்பர் 15 முதல் ஒரு முக்கூட்டு மாநாடு நடைபெறக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த மாநாட்டில் கலந்து கொள்ள பாகிஸ்தான் ஒரு பெரிய தூதுக் குழுவை அனுப்பி வைக்கும் எனத் தெரிய வருகிறது.

இந்த மாநாடு, உலக பாங்கியினால் நடத்தப்பெறுகிறது.

பாக். தூதுக் குழுவின் தலைவராக சிந்து மாநில முதன் மந்திரியான பீர்ஜாடா அப்துஸ் சத்தார் அனுப்பப்படலாமெனவும், அவருடன் செல்பவர்களில், பாக். அரசாங்கத்தின் காரியதரிசியான மொய்னுதீன் கூட இருப்பார் எனவும் தெரியவருகிறது.

---

# வெற்றி கிடைத்தது—ஆனால்.....!

## தொழிற்கட்சியினர் வருத்தம்

பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற இரண்டு உப தேர்தல்களில் தொழிற்கட்சியினர் வெற்றி பெற்றனர். ஷோர்டிச், வேக்பீல்டு என்ற இந்த இரண்டு தொகுதிகளில் பொதுத் தேர்தலின்போதும் தொழிற் கட்சியினரே வெற்றியடைந்தனர்.

இரண்டு தொகுதிகளிலும் வெற்றி பெற்றாலும், தொழிற் கட்சியினர், இந்த உபதேர்தலில் தங்களுக்குக் கிடைத்திருக்கிற வாக்குகள் பற்றி கவலைப்படுகிறார்கள் என்று தெரிகிறது.

இந்த உபதேர்தலில் ஷோர்டிச் தொகுதியில் தொழிற்கட்சி அபேட்சகரான விக்டர் காலின்ஸ் என்பவருக்கு 18,032 வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட கன்சர்வேடிவ் கட்சியினரான மால்கோம் அக்னூ என்பவருக்கு 5,043 வாக்குகளும் கிடைத்தன.

கடந்த பொதுத் தேர்தலின் போது இதே தொகுதியில் தொழிற் கட்சி அபேட்சகருக்கு 18,763 வாக்குகள் கிடைத்தனவாம்; ஆகவே, இந்த உபதேர்தலில் 681 வாக்குகள் குறைந்து போனதுபற்றி தொழிற் கட்சியினர் வருந்துகிறார்களாம்.

---

# அமெரிக்கத் தூதுவரின் மகள்

## பாக். கவர்னரின் மகனை மணந்தார்!

கம்பர்லாந்து, அக். 25—

பாகிஸ்தானில் அமெரிக்கத் தூதுவராயிருக்கும் ஹொரேஸ் ஹில்ட்ரெத் என்பவரின் மகளான ஜேசபைன் ஹில்ட்ரெத் என்ற பெண்மணி, கராச்சியில் உள்ள ஜெனரல் மிர்ஜாவின் மகனை ஹுமாயூன் மிர்ஜா என்பவரை மணந்து கொண்டதாகத் தெரிகிறது.

ஜெனரல் மிர்ஜா கிழக்குப் பாகிஸ்தானில் கவர்னராயிருந்தார். ஞாயிறன்று நடைபெற்ற பாக். மந்திரி சபை மாற்றத்தில் மிர்ஜா, உள்நாட்டு மந்திரியாகக்கூடும் என பேசிக் கொள்ளப்பட்டதாம்.

---

# துருக்கி – பாக். ஒப்பந்தம்

## சவூதி அரேபியா அச்சுறுத்தல்

துருக்கி—பாகிஸ்தான் ஒப்பந்தத்தில் ஈராக் நாடு சேருமானால், தான் அரேபிய லீகிலிருந்து விலகி விடுவதாக சவூதி அரேபியா அச்சுறுத்தியுள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்த ஒப்பந்தம் எப்படிக் கருதப்படவேண்டும் என்பதை, அரேபிய லீக் விவாதிக்க வேண்டுமென சவூதி அரேபிய அரசாங்கம் கோரியுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

# தாய்லாந்தில் உள்ள இந்தோ-சீன அகதிகள்

## வியட்மின் ஆட்சிப் பகுதிக்குச் செல்லத் தடை!

இந்தோ-சீன அகதிகளாக தாய்லாந்து நாட்டில் உள்ள சுமார் 50,000 பேர்களில் 90 சதவிகிதத்தினருக்கும் அதிகமான பேர்கள் வியட்மின் ஆட்சியில் உள்ள வடக்கு வியட்நாமுக்குச் செல்லவே விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், அவர்களை எல்லாம் தெற்கு வியட்நாமிற்கே அனுப்பிவிட தாய்லாந்து முடிவு செய்துள்ளதாம். காரணம், தாய்லாந்து நாடு, வியட்மின்னுடன் ராஜீய உறவு கொண்டதாக இல்லை என்பதேயாம்.

தாய்லாந்தில் உள்ள அகதிகளும் சரி, அல்லது வடக்கு-தெற்கு வியட்நாமில் உள்ளவர்களும் சரி, வருகிற அக். 31-ந் தேதிக்குள் தாங்கள் எப்பகுதியில் வாழ விரும்புகின்றனர் என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டுமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து சர்க்காரின் மேற்கண்ட முடிவை வெளியிட்ட மந்திரி லாவ்சுவின் கூறியதாவது :—

"இங்குள்ள இந்தோ-சீன அகதிகள் முதலில் தெற்கு வியட்நாமிற்கே போக வேண்டும்; அங்கிருந்து அவர்கள் வியட்மின் ஆட்சியுள்ள வடக்கு வியட்நாமுக்குச் செல்லப் பிரியப்பட்டால், அந்த அரசாங்கத்தின் அனுமதியுடன் செல்லட்டும்.

"இந்தோ-சீனவில் யுத்தம் நடைபெற்றதால் தாய்லாந்திற்கு இவர்கள் அகதிகளாக ஓடிவந்தார்கள்; இப்போது அங்கு யுத்தம் ஓய்ந்துவிட்டதால், இனி அவர்கள் தங்கள் நாட்டிற்கே திரும்பிவிட வேண்டியதுதான் நியாயமாகும்."

# 'கற்பிலக்கணம்!'

"ஒரு சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் மொத்த உறுப்பினர்களில் நாலில் மூன்று பங்கு பேர்கள் சம்மதித்தாலன்றி, சுயேச்சைவாதிகளையோ, அல்லது இதர அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையோ காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ளக்கூடாது,"

என்று, அகில இந்திய காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் பல்வந்த்ராய் மேதா, எல்லா சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

# அழகிரி நாடக மன்ற துவக்க விழா

சென்னை மீர்சாகிப்பேட்டை நல்லண்ண முதலி தெரு, 52-ம் எண்ணுள்ள இல்லத்தில் அழகிரி நாடக மன்ற துவக்க விழா 24—10—54 ஞாயிறு காலை 10 மணியளவில் நடைபெற்றது. விழாவிற்கு தோழர் கோ. இளவரசு தலைமை தாங்கினர்.

நாடக மன்றத்தைத் துவக்கி வைத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து, தோழர்கள் கிருட்டினமூர்த்தி, மு. சண்முகம், மதிவண்ணன், தென்னரசு ஆகியோர் பேசியதும் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் நாடக மன்றங்கள் இயங்க வேண்டிய ஒழுங்குமுறை குறித்தும், நாடகங்கள் எப்படி இருந்தால் நாட்டிற்கு நல்லனபயக்கும் என்பது குறித்தும் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நாடகப் பயிற்சியாளரான தோழர் ஏ. தனராசு, நாடகத்தில் பாத்திரங்களேற்கும் தோழர்களுக்கு, பாத்திரங்களின் தன்மை குறித்து விளக்கினர்.

இறுதியாக தோழர்கள் எல்லோருக்கும் ஒரு இனிய தேனீர் விருந்து நடைபெற்றது.

அத்துடன் விழா இனிது முடிவுற்றது.

முதலாவதாக, தோழர் எஸ். எஸ். தென்னரசு எழுதிய 'அத்தான்' என்ற நாடகத்தை மன்றத்தார் நடிப்பர். (ந-கி.)

# கல்வித் துறையில் சர்க்கார் குறுக்கீடு ஆபத்தின் அறிகுறி!

## திட்டம் தரும் திறனற்றோரே கல்வி முறையில் குறைபடுகின்றனர்

"அரசாங்கம், கல்வி முறையிலும், சமுதாய அமைப்புகளிலும் நாளுக்கு நாள் அதிகமாகத் தலையிட்டு வருகின்றது; இது ஆபத்திற்கான அறிகுறியாகும்."

"பல்கலைக் கழகங்களைப் பற்றி சர்க்கார் அதிகாரிகளும், அரசியல் வாதிகளும், சர்வ சாதாரணமாக குற்றங்காண முற்பட்டு விடுகின்றனர்."

"அவர்களுக்கு அமைப்பு முறைகளை மாற்றவோ, திருத்தவோ முடியும் என்றாலுங்கூட, இந்தக் குறை கூறுபவர்கள் எதுவே செய்வதில்லை—பல்கலைக் கழகத்தின் 'சிண்டிகேட்' அல்லது 'செனட்' இவற்றிலுள்ள உறுப்பினர் தொகையை அதிகரிப்பதா, துணை வேந்தர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமா அல்லது வேந்தராயிருக்கும் கவர்னரே நியமித்துக் கொள்ளலாமா—என்பன போன்ற சட்டரீதியான சில மாற்றங்களைத்தான் சர்க்கார் செய்ய முடிகிறது."

"கல்வி முறையின் உள்ளடக்கத்தைத் தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை; கல்வி முறை அமைப்பைத்தான் இவர்கள் காண்கிறார்கள்,"

என்று அலகாபாத் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், இன்று, பீகார் 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' தலைவராயிருப்பவருமான டாக்டர் அமர்நாத் ஜா, அலகாபாத் கல்லூரி மாணவர் கழகக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# மீனவர் துயரங்கள்

### காமராசர் கண்டறிந்தார்!

சென்னை, அக். 25—

சென்னை தொண்டையார்பேட்டையருகில் கடற்கரை ஓரமாக குப்பங்களில் வதியும் சுமார் 800 மீனவர்களின் கஷ்டங்களை முதன் மந்திரி காமராசரும், மந்திரி பக்தவத்சலம் உள்ளிட்ட பல அதிகாரிகளும் நேரில் சென்று கண்டனர்.

மீனவர் வாழும் குடிசைகள், மழை காலத்தில் கடலில் ஏற்படும் கொந்தளிப்பினுல் பாதிக்கப்படுகின்றன; அநேக சமயங்களில் பல குடிசைகளை, கடலிலிருந்து பொங்கி வரும் பேரலைகள் விழுங்கி விடுகின்றன.

மீனவர்கள், வேறு பல இடங்களுக்குச் சென்று வாழ விரும்பாவிடினும், அருகில் உள்ள இடங்களில் வாழலாம் என்றாலும் அங்கு குடிசைகள் அமைத்துக்கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

சென்னை நகர சபையினர் பல காலும் மீனவர்களின் இத்துயருக்கு நிரந்தரமான பாதுகாப்பு காண முயற்சி செய்வதாக வாக்களித்து வருகின்றனர் என்றாலும் இதுவரையிலும் எதும் செய்யவில்லை. மழை காலத்தில் அவர்கள் வேலையின்றித் தவிக்கும் போது மட்டும் சில நாளைக்கு அவர்களுக்கு உணவு தருகின்றனர்; அவ்வளவுதான்.

இப்போது காமராசர் மீனவரின் துயரங்களை நேரில் சென்று பார்த்திருக்கிறார்.

மீனவர்கள் தங்களுடைய குடிசைகளை கடலலைகளுக்குப் பலியிடாமல் இருக்க, பாதுகாப்புடன் கூடிய குடிசைகளை அமைக்க சுமார் ரூ. 5 லட்சம் ஆகுமென எண்ணப்பட்டது; ஆனால் இப்போது, அத்திட்டத்திற்கு சுமார் 15 லட்சம் செலவாகலாமென எதிர்பார்க்கப்படுகின்றதாம்.

இத்திட்டத்தை சென்னை நகர சபை சர்க்காரின் உதவியுடன் நிறைவேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும் என மந்திரி பக்தவத்சலம் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறாராம்.

# நிதி அமைச்சரும் வருந்துகிறார்!

## 'இசைத் துறையில் தமிழுக்கு உரிய இடம் தர வேண்டும்'

### 'உயரிய இசைப்பாட்டு தமிழில் இல்லை என்பது அம்மொழியை இழித்துப் பழிப்பதாகும்!'

"உயரிய சிறந்த இசை ஒரு மொழிக்கு மட்டும்தான் உரியது என்பதல்ல; தமிழ் மொழியில், உயர்ந்த இசைப் பாட்டுக்கள் இல்லை என்று கூறுவது, உண்மையிலேயே தொன்மையான கலை வளமும், இசையும், இனிமையும் மிக்க ஒரு மொழியை பழித்துக் கூறுவதாகத்தான் இருக்க முடியும்,"

—இவ்வாறு, நிதி அமைச்சர் சுப்ரமணியம் அவர்கள் அகில இந்திய வானொலி நிலையத்தார் அக்டோபர் மாதத்தை 'வானொலி மாத'மாகக் கொண்டாடுவதை ஒட்டி, சென்னை மியூசியம் தியேட்டரில் நடைபெற்ற சம்மேளனத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது :—

"தமிழ் மொழியில் புதைந்து கிடக்கும் இசைச் செல்வத்தைப் பெற நுணுகிய ஆராய்ச்சி செய்யப்படுவது மிகவும் உபயோகமான காரியமாக இருக்கும்; இதுவரை அத்தகு ஆராய்ச்சிகள் நடைபெறாது புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது, தமிழ் மொழி; இனியும் தமிழ் இசையை அலட்சியப்படுத்தாது, தமிழ் இசை வளரும் வகையில், இசைப் பாக்கள் வளரும் பொருட்டு அவற்றிற்கு நல்ல ஆதரவு தரவேண்டும்.

"இந்த வகையில், அகில இந்திய வானொலி நிலையத்தார் பெருங் காரியங்கள் செய்ய முடியும்; தமிழ் இசைப் பாக்கள் பிரபல்யம் பெறும் வகையில், சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் முயற்சி செய்ய வேண்டும் என விரும்புகிறேன்."

# சிந்துமுதலமைச்சர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

கராச்சி, அக். 24—

சிந்து மாநில முன்னாள் அமைச்சர் பீர் அலி முகமது ரஷீத், சிந்துப் பிரதமர் அப்துஸ் சத்தார் பீர்ஜாடா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு, சிந்து சட்டசபையைக் கூட்டுமாறு சிந்து கவர்னரைக் கேட்டுக்கொண்டிருக்கிறாராம்!

லாகூரிலிருந்து திரும்பிய வுடன், சிந்து கவர்னர், இந்தக் கோரிக்கையைக் கவனிப்பார் என்று தெரிகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு 33 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக முகமது ரஷீத் கூறுகிறாராம்.

# நல்ல காரியம்!

ஆந்திர அரசாங்கம், சிறிய அளவு நிலமுடையவர்களுக்கு நிலவரியினின்றும் விதிவிலக்களித்து உத்திரவு பிறப்பித்துள்ளது.

நிலவரியாகவோ, அல்லது தண்ணீர் வரியாகவோ, ஆண்டிற்கு ஒன்று அல்லது பல 'பட்டா'க்களில் உள்ள நிலத்திற்காக ரூ. 10-க்குக் குறைவாக வரி தருகிறவர்களுக்கெல்லாம் விலக்களிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்திரவு, 1364-ம் பசலியிலிருந்து (1954—55) அமுலுக்கு வருமெனவும் சொல்லப்படுகிறது.

# 300 வழக்குகளை விசாரிக்க.....

### புதிய நீதிபதிகள் நியமனம்!

புதுவை, அக். 25—

வருகிற நவம்பர் 1-ந் தேதி யன்று ஏற்படும் அதிகார மாற்றத்திற்குப் பிறகு, பிரெஞ்சிந்தியாவில் விசாரிக்கப்படாது உள்ள சுமார் 300 வழக்குகளை விசாரிக்க, எட்டு நீதிபதிகள் புதியதாய் பதவியேற்றுள்ளனர். இதுவரை பிரெஞ்சுக்காரர்கள் நீதிபதிகளாயிருந்தனர். அவர்களெல்லாம் தங்கள் பதவிகளிலிருந்து விலகிக் கொண்டனர். அதன் பிறகே புதிய நீதிபதிகள் நியமனம் நடைபெற்றுள்ளது.

இந்த எட்டு புதிய நீதிபதிகளில், முன்பிருந்தவர்களில் ஒருவர் மட்டுமே உள்ளார். அந்த முன்னையநீதிபதிகள் சென்னை சென்று அங்கிருந்து விமானம் மூலம், பிரான்ஸ் செல்வார்களெனத் தெரிகிறது.

புதியதாக பதவி ஏற்றுள்ள நீதிபதிகள், விசாரிக்கப்படாது எஞ்சியுள்ள சுமார் 300 வழக்குகளை விசாரிக்க மட்டுமே அதிகாரம் பெற்றவர்களாவர். மற்றப்படி, அதிகார மாற்றத்திற்குப் பிறகு, வேறு நீதிபதிகள் நியமிப்பதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் எனத் தெரிகிறது.

# இந்திய ரயில்வே போர்டு

### புதிய டைரக்டர்கள் நியமனம்

புதுடில்லி, அக். 25—

இந்திய ரயில்வே போர்டு டைரக்டர்களாக மூன்று பேர்கள் புதியதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்போது தென் பகுதி ரயில்வேயில் உள்ள கமலாகரராவ் நாயுடு, கல்யாண ராமன் ஆகியோரும், வடபகுதியில் உள்ள எஸ். கே. ராய் என்பவரும் டைரக்டர்களாக நியமிக்கப்பட்டுள்ளனரெனத் தெரிகிறது.

# டாக்டர் தருமாம்பாள் அவர்கள் 63-ம் ஆண்டு நிறைவு

### தாய்மார் கழகப் பாராட்டு

19—10—54 பிற்பகல் 2-30 மணிக்குச் சென்னை முத்துகிருஷ்ணன் தெரு, 15 எண்ணுள்ள இல்லத்தில் தாய்மார் கழகச் சார்பில் டாக்டர் எஸ். தருமாம்பாள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், முன்னாள் மேயர் சி. தாதுலிங்க (முதலியார்) மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பின்னர், தோழியர் டாக்டர் தருமாம்பாள் அம்மையாரின் 63-ம் ஆண்டு நிறைவினைக் குறித்துப் பாராட்டி தோழியர்கள் மலர்முகத்தம்மையார், பார்வதிஅம்மையார், அனுசூயாமோகனசுந்தரம், அம்சவேணி ஆகியோர் பேசினர்.

மயிலை சிவமுத்து அவர்கள் 'இனியவை கூறல்' என்னும் அதிகாரத்தின் அரிய கருத்துக்களை விளக்கிக் கூறி, அவ்வதிகாரத்திலுள்ள பத்துப் பாடல்களும் அமைந்துள்ள அழகினையும் இனிய தன்மையினையும் எடுத்துக்காட்டினர்.

# "குறள் செல்வம்"

17—10—54 மாலை 6-30 மணியளவுக்கு பொன்மலை திருக்குறள் கழகத்தின் திங்கள் விழா பொன்மலை இரயில்வே படிப்பக மன்றத்தில் நடைபெற்றபோது, தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் "குறள் செல்வம்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினர்கள்.

# பம்பாய் தெ. இ. திராவிட மகாஜன சங்கம்

12—10—54ல், பம்பாய் தாராவி சங்க அலுவலகத்தில் தி. சு. மாடசாமி தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில், வரவு—செலவு கணக்குகள் ஆகியவை ஒப்புக் கொள்ளப்பட்டபின், கவிமணி தேசிகவிநாயகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# தி. மு. க. கொடியேற்றம்

சென்னை வண்ணை தி. பெ. சாலை, (தியாகராயர் கல்லூரி சமீபம்) 131-ம் எண்ணுள்ள இல்லக் கொடிமரத்தில், 18—10—54 பகல் 2-மணிக்கு தி. மு. கழகக் கொடி தோழர் இளந்தென்றல் முயற்சியாலும், தி. கு. பலராமன் உதவியாலும் ஏற்றப்பட்டது.

# 101-மணி நேர இடைவிடாத சைக்கிள் சவாரி

6—10—54 காலை 7-30 மணியளவுக்கு திருச்சி நகர மன்றத் தலைவர் திரு. ஏ. ராமசாமி தேவர் அவர்கள், திருச்சி, கீழப்பொலிவார்டு ரோடு, டாக்டர் மதுரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்து வைத்த 101-மணி நேர இடைவிடாத இரவு பகல் சைக்கிள் சவாரியை வலங்கைமான் என். பக்கிரிசாமி (வயது 18) 10-10-54 காலை 9-45 மணிக்கு, கடுமையான வெயிலடித்ததின் காரணமாக 99½ மணி நேரம் ஓட்டி வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்.

# எனது நன்றி

அன்புடையீர்! வணக்கம்.

சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதியில் 29—9—54ல் நடைபெற்ற மாவட்ட மன்றத் தேர்தலில் எனக்கு ஆதரவு காட்டி வெற்றியைத் தேடித் தந்த வாக்காளர்களுக்கும், என் வெற்றிக்காக இரவு பகலென்றும் பாராமல் உழைத்த நண்பர்களுக்கும், வாழ்த்துக்கள் வழங்கிய தோழர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இரா. தாண்டவன்,
இடைப்பாடி : 21-10-54.

# பி.-சோ. கட்சி கலைக்கப்படுமா?

## குழப்பமான எதிர்காலம் நிலவுகிறது!

## திட்டம் ஏதும் வகுக்க இயலாத நிலையாம்!

### நேருவுடன் நட்பு அதிகமாகிறதென பலர் அச்சம்!

காங்கிரஸ் கட்சியின் மறுபதிப்பான பிரஜா - சோஷலிஸ்டு கட்சியின் எதிர்காலம் நம்பிக்கையற்றதாக இருக்கிறது என புதுடில்லியில்உள்ள அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன என்று தெரிகிறது. இக்கட்சியின் குறுகிய கால சரிதத்தில் அடிக்கடி இடையூறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்றும், இப்போது நெருக்கடி அதிகமாகிவிட்டதென்றும் கருதப்படுகிறது.

இக்கட்சியின் தலைவரான ஆச்சாரியா கிருபளானி, பிரஜா - சோஷலிஸ்டு கட்சியின் நிர்வாகக் குழு அனைத்தும் இராஜினமா செய்யும் என்று கூறிவிட்டார். நவம்பர் திங்களில் நாகபுரியில் நடக்க இருக்கும் பி.-சோ. கட்சி மாநாட்டில் புதிய தேர்தல்கள் நடைபெறும் என்று தெரிகிறது.

பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் தூண் எனக் கருதப்படும் தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஏற்கெனவே, தன்னை பூமிதான இயக்கத்திற்கு ஒப்படைத்துவிட்டிருப்பது பலர் அறிந்த உண்மையாகும். இப்பொழுது, அவர், கட்சியுடன் தனக்குள்ள தொடர்புகள் அனைத்தையும் தான் அறுத்துக்கொள்ள முடிவு செய்து விட்டதாகவும், சாதாரண உறுப்பினர் பதவியையும் தான் இராஜினமா செய்ய விரும்புவதாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

கட்சியின் உள்ளே ஏற்பட்டிருக்கிற பிளவுகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றனவாம்.

பண்டித நேரு, 'எனக்குப் பின் யார்?' என்ற கேள்வியை எழுப்பியிருப்பதும், தன்னிடம் உள்ள பொறுப்புகளை வேறு யாரிடமாவது அளிக்க விரும்புவதாக தெரிவித்திருப்பதும், பி.-சோ.-கட்சியின் முடிவைத் துரிதப்படுத்துவதாக இருக்கிறதாம்.

பிரஜா-சோஷலிஸ்டு கட்சி என்பது, முன்னாள் காங்கிரஸ்காரர்கள், அரசியல் நோக்கம் கொண்ட சுயேச்சைகள் ஆகியோர் கொண்ட 'கலப்பு' என்பதால், நேருவின் மேற்படி கருத்து இக்கட்சியின் முடிவைத் துரிதப்படுத்தும் என்று பலர் நம்புகிறார்களாம்.

பி.-சோ. கட்சியின் துவக்கத்தில், இக்கட்சி, காங்கிரசைவிட முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்டதாகவும், கம்யூனிஸ்டுகளை விட குறைந்த தீவிர நோக்கம் கொண்டதாகவும் விளங்குமென்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால், இது போன்ற திட்டமொன்றை வகுத்து நாட்டு மக்கள் முன்னிலையில், அக்கட்சியால் வைக்க முடியாது போயிற்று என்றும் கூறப்படுகிறது.

காங்கிரசின் தலைவர்களாக இருந்து பழுத்துப் போயுள்ளவர்களால், புதிய கட்சிக்குத் திட்டமொன்றை வகுக்க இயலவில்லை என்றும், அவர்களெல்லாரும், இப்போது, நேருவுடன் ஒத்துழைக்க சந்தர்ப்பம் கிடைத்தால் அத்துடன் திருப்தி அடைந்துவிடுவார்கள் என்றும் தெரிகிறது.

ஆனால் கட்சியில் இளம் உள்ளம் கொண்ட டாக்டர் லோகியா போன்றோர், 'பி.-சோ. கட்சியினரை, நேரு தன் பக்கம் இழுக்க முனைகிறார்,' என்று கருதுவதாகத் தெரிகிறது. 'நேரு போன்றோரின் ஆதிக்கத்தினால்தான், பி.-சோ. கட்சி, வலிவான திட்டமொன்றை தயாரிக்க இயலவில்லை,' என்று அவர்கள் நம்புகிறார்களாம்.

இக்கருத்துக்குச் சாதகமாக, பண்டித நேருவுடன் சென்ற ஆண்டில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் நடத்திய பேச்சு வார்த்தைகள் சுட்டிக் காட்டப்படுகிறது.

நேருவுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளைப் பலர் சந்தேகத்துடன் கவனித்தனர் என்றும், இப்போதும் அந்த சந்தேகம் பி.-சோ. கட்சியினர் பலருக்கு நீடித்துக் கொண்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

இதுபற்றி பேசுகையில், ஜெயப்பிரகாஷ் நாராயணன், 'பண்டித நேருவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியபோது, ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டுத்தான் காங்கிரசுடன் ஒத்துழைக்க முடியும்,' என்று தான் கூறியதாகவும், ஆனால், இதுபற்றி பலரிடையே தவறான எண்ணங்கள் தோன்றின என்றும், நான் உதவிபிரதமமந்திரியாகப் போகிறேன் என்று பலர் நினைத்தார்கள் என்றும் கூறியுள்ளார்.

"இப்போது, பி.-சோ. கட்சியிலுள்ள குழப்பங்களும், பிளவுகளும் கட்சியை அழித்துவிடும் அளவுக்கு வளர்ந்துவிட்டது என்று கூற முடியாது," என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

ஆனால், இப்போதும் முன்னாள் காங்கிரஸ்காரர்களான பி.-சோ. கட்சியினரை உள்ளே அழைக்கும்படியான முறையில் காங்கிரசின் கதவு திறந்தேயிருக்கிறது; ஆகவே, பலர் அங்கே செல்லமாட்டார்கள் என்பதை வலியுறுத்திக் கூற முடியாது.

பண்டித நேரு, ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் தனி அன்பு கொண்டவர் என்றும், சில நேரங்களில், நேருவுக்குக் காங்கிரசாருடன் தொடர்பு கொள்வதைவிட, பி.-சோ. கட்சியினருடன் தொடர்பு கொண்டு சில பிரச்சினைகளை விவாதிப்பதில் அதிக தொல்லை இருப்பதில்லை என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் நாகபுரியில் நவம்பர் திங்களில் நடைபெற இருக்கும் பி.-சோ. கட்சி மாநாட்டில் கட்சியின் திட்டம் என்னவென்று தெளிவாக முடிவு செய்யப்படுமென்றும், அந்தப் புதிய திட்டத்தை நிறைவேற்ற புதிய நிர்வாகக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்படும் என்றும் ஆச்சார்யா கிருபளானி காசியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இப்போது பி.-சோ. கட்சியின் பொதுக் காரியதரிசியும், மற்றொரு காரியதரிசியும் ராஜினமா செய்திருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருவாங்கூரில் காங்கிரஸ் உதவியுடன் ஆட்சி புரியும் பி.-சோ. கட்சியினர், மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கட்சிக்கு இழுக்கை உண்டாக்கிவிட்டதாகவும் பலர் கருதுகின்றனர்.

# அமைதியைக் காக்க நடுநிலைமை நாடுகளின் சேவை!

## பயன் தருமென்கிறார் பெர்ட்ரண்ட் ரசல்

### இந்தியா-சுவிடன் முயற்சி செய்யலாம் என்று ஆலோசனை

"இந்தியா, சுவீடன் போன்ற நடுநிலைமை நாடுகள் முனைந்து, நடுநிலைமை வகிக்கக் கூடிய நாடுகளுக்கு அறிவூட்டும் வகையில், அறிக்கை ஒன்றைத் தயாரிக்க வேண்டும்,"

என்று, சிறந்த சிந்தனையாளரான பெர்ட்ரண்ட் ரசல் கூறியுள்ளார்.

'இன்றைய பிரிட்டன்' என்னும் ஆங்கில மாத இதழ் ஒன்றில், அவர், 'சமாதானத்திற்கான திட்டம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் அவர் மேலும் கூறியதாவது :—

"இந்தியா - சுவீடன் போன்ற நாடுகள் தயாரிக்கும் இது போன்ற அறிக்கைகள், நடுநிலைமை வகிக்க வாய்ப்புள்ள நாடுகளின் மனதை மாற்றி, அவர்கள் எவ்வாறு ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்ட நாடுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உணர்த்தும் தன்மை பெற்றவையாகும்; அதுபோலவே, கம்யூனிச அல்லது கம்யூனிச எதிரி நாடுகளுக்கு போர் பற்றிய வெறியைத் தணிக்குமாறு புத்திகூறும் தன்மை கொண்டவையாகும்."

பெர்ட்ரண்ட் ரசலின் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆங்கிலப் பத்திரிகை, இந்தியா, சுவீடன் ஆகிய நாடுகளின் பிரதமர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

"போரின்மூலம் தங்கள் குறிக்கோளை அடைய முடியாது என்ற உண்மையை அந்த நாடுகள் உணரவில்லை; இந்தக் கருத்து, கம்யூனிச நாடுகளுக்கும், கம்யூனிச எதிரி நாடுகளுக்கும் பொருந்தும்," என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

"நடுநிலைமை நாடுகளைக் கொண்ட குழு ஒன்று இந்த அறிக்கையை தயாரிக்கக் கூடும்போது, போரில் சிக்கி துன்புற வாய்ப்புக்கள் கொண்ட எல்லா நாடுகளையும் அழைக்க வேண்டும்; அவர்கள் கருத்தையும் கேட்க வேண்டும்" என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

"இந்நூ தயாரிக்கும் அறிக்கையை இருதரப்பினரும் ஒப்புக்கொண்டால், ஒருவருக்கொருவர் கொண்டுள்ள சந்தேகம் குறையும்; இருதரப்பினரும் அந்த அறிக்கையை ஒப்புக்கொள்ளாமலிருப்பதும் மிகவும் அரிது,"

என்று, அவர் மேலும் கூறுகிறார்.

"அமைதியான முறையில் செய்யப்படும் கோழைத்தனமான செய்கைகள் மரணத்தை நோக்கித்தான் அழைத்துச் செல்லும்; போருக்காக வேண்டிய தைரியம், மனித குலத்தில் பெரும்பான்மையினரிடையே பொதுவாகக் காணப்படும்; அதுபோலவே, நடுநிலைமை நாடுகள் ஒரு சில, அமைதிக்காக உழைக்க முடியும் என்பதை, 'ஈடேறாத நினைப்பு' என்று கூற இயலுமா? இதுபோன்ற முயற்சி இதுதான் முதல் தடவையாகும்; ஆனால், வெற்றியடையுமென்ற நம்பிக்கை கொண்டதாகும்."

"கம்யூனிச நாடுகளும், கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளும், ஒன்று சேர்ந்து வாழ முடியும், அல்லது ஒன்றாக மடிய முடியும்; இவை இரண்டைத் தவிர, வேறு மூன்றாவது மார்க்கம் எதும் இல்லை,"

என்று, பெர்ட்ரண்ட் ரசல் மேலும் கூறியுள்ளார்.

### சிறப்புக் கூட்டம்

17—10—54 காலை 10-30 மணிக்கு திருப்பூர் தொழிலாளர் பகுத்தறிவு படிப்பகத்தில் தோழர் முத்துசாமி தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், தோழர் க. அறிவழகன், தோழியர் அருண்மொழி ஆகியோர் தொழிலாளர் பகுத்தறிவு என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினர்.

# அணுகுண்டு தயாரிக்க உதவும் மானேசைட்

### ஆந்திர கடற்கரையில் ஏராளமாகக் கிடைக்கிறது!

ஆந்திராவில் களிங்கபட்டணம் முதல் காக்கினடா வரையில் உள்ள கடலோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான டன்கள் 'மானேசைட்' கிடைக்கிறது என்று ஆந்திரப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சி. மகாதேவன் கண்டறிந்து இருக்கிறாராம்.

மண்ணிற்கு அடியில் நான்கு அல்லது ஐந்து அடிக்குக் கீழ், கறுப்பு நிறமுள்ள பாறைகளில் இந்த 'மானேசைட்' கிடைக்கிறதாம்.

அணுகுண்டு தயாரிக்கவும், ஆக்க வேலைக்கும் பயன்படுவதான 'தோரியம்' என்னும் உலோகம், 'மானேசைட்,' 'ஆக்சைடு'களாகக் கிடைக்கிறது.

இந்திய தேசீய விஞ்ஞான நிலையத்தினரால் வெளியிடப்பட இருக்கும் பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் மகாதேவன் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

கறுப்பு நிறப் பாறைகளில் இரண்டு முதல் எட்டு சதவீதம் வரை 'மானேசைட்' கிடைக்கிறதாம். இலாபகரமாகவும், சுலபமான முறைகளாலும் 'மானேசைட்'டைப் பிரித்து எடுக்கலாம் என்றும், திருவாங்கூர் கடற்கரையில் கிடைக்கும் மணலுக்கு ஆந்திராவில் கிடைக்கும் 'மானேசைட்' சிறந்த மறு பொருளாகும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

விசாகபட்டினம் மாவட்டத்தில் கடந்த எட்டு ஆண்டு காலமாக இதுபற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்படுகிறதென்றும், பிமிலி பட்டணம் முதல் போலாவரம் வரை உள்ள பிரதேசங்களில் 'மானேசைட்' ஆயிரம் டன்களாவது கிடைக்கும் என்றும் நிச்சயமாகக் கருதப்படுகிறது.

'மானேசைட்' மட்டுமின்றி, இப்பகுதிகளில் உள்ள மணலில் இல்மனைட், இர்கான், வர்னட், சிலிமானைட் என்ற முக்கிய இரசாயனப் பொருள்களும் கிடைக்கின்றன என்று கூறப்படுகிறது.

# ஜோத்பூர் அதிகாரி மனைவி உடன்கட்டை!

### பூசாரி கைது!

ஜோத்பூர், அக். 23—

இறந்துபோன ஜோத்பூர் அரண்மனை கணக்கு அதிகாரி பிரிகேடியர் ஜாபர் சிங்கின் மனைவியார், கணவனுடன் உடன்கட்டை ஏறியது பற்றி போலீசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று தெரிகிறது.

ஜாபர் சிங்கின் இறுதிச் சடங்குகளைச் செய்த பூசாரி கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

அவர் மீது. இந்தியன் பினல் கோட் 306-வது பிரிவின்படி தற்கொலைக்குத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறதாம்.

'சதி' நடைபெற்ற இடத்திற்கு பத்திரிகையாளர்கள் சென்ற போது பிணங்கள் எரிக்கப்பட்ட இடத்தைச் சுற்றிலும், மக்கள் கூடி நின்று, தேங்காய் உடைத்து பூசை செய்வதைக் கண்டனராம்!

ஜாபர் சிங் இறந்ததும், அவர் மனைவி, தனது திருமண காலத்து நகைகள், உடைகள் அனைத்தையும் அணிந்துகொண்டு, இறந்த கணவனின் தலையை தனது மடி மீது வைத்துக்கொண்டு இரவு முழுமையும், 'ராம், ராம்' என்று கூறிக்கொண்டிருந்ததாகவும், தன் மகனுக்கு ஒரு கைவளையலைக் கழற்றிக் கொடுத்து அவனை வாழ்த்தியதாகவும் தெரிகிறது.

தக்குராணி என்ற அப்பெண்மணி, இடுகாட்டிற்கு எப்படிச் சென்றார் என்பது புதுமையாகவே இருக்கிறதாம்.

மறுநாள் காலை போலீசார் இந்தத் தம்பதிகளின் சாம்பலைத் தோண்டியபோது, சுற்றி நின்ற மக்கள் போலீசாருக்கு எதிராக கோஷமிட்டார்கள் என்று தெரிகிறது.

பம்பாய் கோட்டைப் பகுதியில் உள்ள 'பெல்லார்ட் எஸ்டேட்'டில் உள்ள மூன்றடுக்கு மாடி வீடொன்று நேற்று இரவு இடிந்து விழுந்து பாழாயிற்று; வீட்டினுள் இருந்த பன்னிருவர்கள், இந்த விபத்தில் சிக்கினர் என தெரிகிறது.

# குறள் நெறி விழா

சென்னை நுங்கம்பாக்கம் அவனியூச் சாலை எதிர் திடலில், குறள் நெறி மூன்றாம் நாள் விழா 27—10—54 மாலை 4 மணிக்கு நடைபெறும்.

தலைவர் : அ. மு. பரமசிவானந்தம்

பேசுவோர் :

சி. என். அண்ணாதுரை
திருக்குறளார் வீ. முனுசாமி
என். சங்கரன்
சுரதா

இன்னிசை: செல்வி கௌசல்யா

இரவு 10 மணிக்கு, மணிவண்ணன் குழுவினரின் 'புலி நகம்' ஓரங்க நாடகம் நடைபெறும்.

### திருவள்ளுவர் விழா

28—10—54 மாலை 4-30 மணிக்கு, மதுரை தியாகராசர் கல்லூரி இளங்கோ மன்றத்தில் திருக்குறள் வீ. முனுசாமி 'வள்ளுவன் கண்ட அரசியல்' என்ற பொருள் பற்றிப் பேசுவார்.

# எம். ஆர். ராதாவுக்கு அன்பளிப்பு

சென்னை, அக். 25—

கடந்த 6 வார காலமாக எம். ஆர். இராதா குழுவினர் நடத்தி வந்த "இராமாயண" நாடகம் நேற்றுடன் சென்னையில் முடிவடைந்தது; இனி, வெளியூர்களில் அந்நாடகம் நடைபெறும்.

வந்தனோபசாரமாக நேற்றையத் தினம் நாடகம் நடைபெற்றபோது தோழர் எம். ஆர். இராதா அவர்களுக்குப் பல கழகங்கள், பிரமுகர்கள் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன; இரு வெள்ளிக் கோப்பைகள் பரிசளிக்கப்பட்டன.

"இராமாயண"க் கதையைத் தீட்டிய திருவாரூர் தங்கராசுவுக்கு நேஷனல் பிக்சர்ஸ் உரிமையாளர் ரூ. 1,000-மும், எம். ஆர். இராதா அவர்கள் ரூ. 1,000-மும் அன்பளிப்பாகத் தந்தனர்; இரு வெள்ளிக் கோப்பைகளும் பரிசாகத் தரப்பட்டன.

அன்பளிப்பைப் பெற்றுக் கொண்ட தோழர்களிருவரும், தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டனர்.

### பம்பாயில் கலைவிழா

பம்பாய் தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் நிதி உதவிக்காக பம்பாய் தாராவியிலுள்ள குட்டிவாடி வட்டத்தில், சென்ற வாரத்தில் 4 நாட்கள் தொடர்ந்து கலைவிழா நடைபெற்றது. முதல் நாளன்று தோழர் எம். வி. துரைசாமி தலைமையில் ராஜாமணி—மோகன் குழுவினரின் பரதநாட்டியமும், மறுநாள், சினிமா டைரக்டர் ஜெயராஜ் தலைமையில் நெல்லை மறுமலர்ச்சிமன்றத்தாரின் 'மனிதன்' நாடகமும், 3-வது நாள் குமாரி இந்திரா ஜம்புநாதன் தலைமையில் கதம்ப கலா நிகழ்ச்சிகளும், கடைசி நாளன்று, தோழர் ரெ. முருகையா தலைமையில் 'ரத்தப் பரிசு' எனும் நாடகம், பம்பாய் தமிழர் கலை மன்றத்தாராலும் நடத்தப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.